# தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி) திருப்பத்தூர்,

# திருப்பத்தூர் மாவட்டம் – 635601

# தமிழ்த்துறை

## "புதிய அவையம்" UGC CARE Listed Journal




**வ**டதமிழகத்தில் தூய தொன்போஸ்கோ சபை அருட்தந்தையர்களால் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியானது கடந்த 70 ஆண்டுகளாக கல்விச் சேவையாற்றி வருகின்றது. எம் கல்லூரியின் தமிழ்த்துறையில் கடந்த 2017ஆம் ஆண்டு '**புதிய அவையம்**' என்ற மின்னிதழ் தொடங்கப்பட்டது. **ISSN : 2456-821X** எண் கொண்ட இவ்விதழானது, உள் மற்றும் வெளிப்புற மதிப்பீட்டு வல்லுநர் குழுவினைக் கொண்டதாகும். தமிழ் இலக்கிய ஆய்வுகளில் ஈடுபடும் பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்களின் ஆய்வுக்கட்டுரைகள் பெறப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு இவ்விதழில் வெளியிடப்படுகிறது. இந்நிலையில் எமது இப்பணியினை அங்கீகரிக்கும் விதத்தில் பல்கலைக்கழக மானியக் குழுவின் தெரிவு செய்யப்பட்ட ஆய்விதழ் பட்டியலில் **(UGC CARE Listed Journal - 2023)** எமது இதழ் இடம்பெற்றுள்ளது. முற்றிலும் இணையவழித் தொழில்நுட்பத்தில் எமது இதழ் செயல்படுவது குறிப்பிடத்தக்கதாகும். தமிழக அளவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் செயல்படும் தமிழ்த்துறைகளில் முதலாவதாக எம் இதழ் விளங்குகின்றது.

- எமது அடுத்த வெளியீடு **மார்ச் மாதம்** வெளியிடப்படும்.
- அடுத்த வெளியீட்டுக்கான கட்டுரைகளை *20.01.2023 முதல் 20.02.2023* வரை எமது இதழுக்கான இணையப் பக்கத்தில் பதிவேற்றலாம்.
- பதிவேற்றம் செய்யப்பட்ட கட்டுரைகளில் **மதிப்பீட்டுக் குழுவினரால் தேர்வு செய்யப்படும் கட்டுரைகள் மட்டுமே ஏற்கப்படும்**.

- தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்கள் மட்டும் **கட்டணமாக ரூ.1500** செலுத்த வேண்டும்.
- **தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் மற்றும் கட்டணம் செலுத்தும்முறை குறித்து கல்லூரி இணைய தளத்தில் EVENT என்ற பகுதியில் பின்னர் அறிவிக்கப்படும்.**
- கட்டுரைகள் வெளியிட்ட பின்னர் ஒவ்வொரு கட்டுரையாளருக்கும் **கட்டுரைத் தொகுப்பு** மற்றும் **சான்றிதழ்** தங்களது முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.
- மதிப்பீட்டுக் குழுவினரால் **தேர்வு செய்யப்பட்ட கட்டுரைகள் தவிர ஏனையவைகள் இணையப்பக்கத்தில் இருந்து நீக்கப்படும்.**
- குறிப்பிட்டுள்ள தேதிக்குப் பின்னர் பதிவேற்றும் கட்டுரைகள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**கட்டுரை வடிவமைப்பு குறித்து மேலும் அறிந்துகொள்ள...**

http://www.shcpub.edu.in/tamil_guidelines/

என்ற இணைப்பைச் சொடுக்கவும்.

**ஆய்வுக்கட்டுரைகளை எவ்வாறு பதிவேற்றுவது என அறிந்துகொள்ள**

https://www.youtube.com/watch?v=_bu-ZiGLg0Y

என்ற இணைப்பில் உள்ள வழிகாட்டுக் காணொளியைப் பின்பற்றவும்.

**கல்லூரி இணையதளத்தைக் காண** - http://www.shctpt.edu/

**Scan this Code & get web link**

**கல்லூரி முதல்வர்**

**அருட்திரு முனைவர் தா. மரிய ஆண்டனி ராஜ் ச.ச.,**

**Principal,**
Sacred Heart College,
(Autonomous)
Tirupattur-635 601. Vellore Dt